## மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
## கும்முடிப்பூண்டி

| வழக்கு எண்: C.C. 62/2024 | காவல் நிலையம்: பாதிரிவேடு | |
|---|---|---|
| பெயர் : மணிகண்டன் | அ.சா.3 | நாள் : 17.11.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.3 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | தாலுக்கா | : | -- |
| தந்தை பெயர் | : | காசி | தொழில் | : | ஊர் காவலர் |
| கிராமம் | : | -- | வயது | : | 29 |

( எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது பாதிரவேடு காவல் நிலையத்தில் ஊர் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.10.2023 ம் தேதி இரவு 10 மணிக்கு பாதிரிவேடிலிருந்து மாதர்பாக்கம் வரும் பஜாரில் சிறப்பு உதவி ஆய்வாளர் முருகவேல், தலைமை காவலர் கஜேந்திரன் மற்றும் நானும் சோதனை செய்து கொண்டிருந்தோம். அப்போது ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் வந்தார். அவரை உதவி ஆய்வாளர் முருகவேல் அவரை நிறுத்தி வாகனத்திற்குண்டான ஆர்சி, லைசன்ஸ், இன்சுரன்ஸ் கேட்டபோது ஒத்தா தேவிடியா பையா நீங்க என்ன பெரிய மயிரா உங்களுக்கு இதே வேலையா போச்சு என்று சொல்லி உருட்டுகட்டையால் உதவி ஆய்வாளரை அடிக்க வந்தார். அதனை நாங்கள் தடுக்க சென்றோம் அதற்குள் அவர் வேகமாக இருசக்கர வாகனத்தில் சென்று விட்டார். பிறகு இரண்டு நபர்கள் அங்கு நடந்து வந்தார்கள். அவர்களிடம் தகராறு செய்ய நபரை பற்றி உதவி ஆய்வாளயர் விசாரணை செய்தார். அதற்கு அவர்கள் மேற்படி நபரின் அவரது பெயர் தியாகு எனவும் என்எஸ் நகரை சேர்ந்தவர் எனவும், தெரிவித்தனர். இரவு 11 மணிக்கு உதவி ஆய்வாளரும் நாங்களும் சென்று காவல் நிலையத்திலிருந்த உதவி ஆய்வாளர் மாரிமுத்து அவர்களிடம் சம்பவம் தொடர்பாக புகார் அளித்தோம். அந்த புகார் தொடர்பாக உதவி ஆய்வாளர் மறுநாள் என்னை விசாரணை செய்தார். சம்பவத்தில் ஈடுபட்ட நபரை என்னால் அடையாளம் காட்ட இயலும். ஆஜர் எதிரி தான் அந்த நபர் ஆவார். எதிரி பயன்படுத்திய உருட்டு கட்டை

மற்றும் இருசக்கர வாகனத்தை என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள உருட்டு கட்டை மற்றும் இருசக்கர வாகனம் தான் எதிரி பயன்படுத்திய பொருட்கள் ஆகும். அவை ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ தினத்தன்று நான் பணியில் இருந்தததற்ககான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று இரவு 10 முதல் 01.00 மணிவரை வாகன தணிக்கை செய்தோம். 1 மணிக்கு தணிக்கை முடிந்த பிறகு தான் மூவரும காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து தணிக்கை செய்யும் இடத்திற்கும் இரு இரண்டு சக்கர வாகனத்தில் வந்தோம்.

**(மறு விசாரணை இல்லை)**

ஒம்/– மணிகண்டன்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R Digitally signed by SENTHIL KUMAR R Date: 2025.11.17 15:00:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி